1973 நவம்பர் 26]

Report on milk market

* 416 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Market Research Corporation of India has submitted its report to the State Government about the Milk Market in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, அவ்வித அறிக்கை ஆண்டுதோறும் அனுப்பப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆண்டுதோறும் அனுப்பப்படுகிற அறிக்கையல்ல. நம்முடைய பால்வள வாரியம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த அறிக்கை அகில இந்திய விற்பனை ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பிலே கொடுக்கப் பட்டுள்ளது.

பள்ளப்பட்டிப் பகுதிக்கு பால் வழங்கல்.

* 417 **வினா.**—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரவாக்குறிச்சி ஒன்றியம், பள்ளப்பட்டி பேரூராட்சி மன்றப் பகுதியில் பால் வினியோகத்தை அதிகரிக்க தனியார் துறை யிலோ, அரசுத் துறையிலோ பால்பண்ணை ஒன்றைத் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

@ 419–420-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பட்டுள்ளது.